**ஒதுக்கீட்டுத் தலைப்பு - 173 அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 13 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்

கூற்று என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவந்திருக்காமை**

அமைச்சினால் பின்வரும் ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(i) மொத்த ஏற்பாடும் செலவும்**

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 186,050,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 99,887,011 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்புக்கள் ரூபா 86,162,989 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 46.3 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டு வருபவை | 86,050,000 | 86,050,000 | 22,331,683 | 25.95 |
| மூலதனம் | 100,000,000 | 100,000,000 | 63,831,306 | 63.83 |
| மொத்தம் | 186,050,000 | 186,050,000 | 86,162,989 | 46.31 |

**(ii) ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருத்தல்**

- 05 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,200,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.
- 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் ஏற்பாடுகளை நிறுத்தி வைத்த பின்னரும் 18 செலவின விடயங்களின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ரூபா 75,099,495 ஆகக் காணப்பட்டதுடன் அது அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 26 சதவீதத்திற்கும் 93 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 1,993,712 வரவு மீதியொன்று காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக பதவிநிலைத்தரமற்ற 11 உத்தியோகத்தர்களிற்கு 57 சந்தர்ப்பங்களில் ரூபா 452,350 மொத்தமான குறித்தநோக்க உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) நிதிப்பிரமாணம் 371(2)(இ) இன் பிரகாரம் பணி நிறைவேற்றப்பட்டவுடன் பெறப்பட்ட குறித்த நோக்க கட்டுநிதியை தீர்க்க வேண்டிய போதிலும், பணி முடிவுற்று 74 நாட்கள் தாமதத்தின் பின்னர் உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட்டிருந்தன.

(iii) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் ஒரு பதவிநிலை உத்தியோகத்தருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் வழங்க முடியுமான ஆகக்கூடிய உப கட்டுநிதி ரூபா 20,000 ஆன போதிலும், அந்த ஏற்பாடுகளிற்கு முரணாக 12 சந்தர்ப்பங்களில் 08 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 20,000 இற்கு மேற்பட்ட ரூபா 536,000 மொத்தமான குறித்த நோக்க கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாணசபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவன தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து அடுத்து வரும் காலத்திற்கு ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மேற்குறிப்பிட்ட திட்டம் 2012 ஆகஸ்ட் 23 ஆந் திகதியன்றே தயாரிக்கப்பட்டிந்தது.

### 1.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 1.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 மார்ச் 06 ஆந் திகதியன்றே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) நிதிப்பிரமாணங்கள்** | | |
| நி.பி. 104 (3) | - | வாகனங்கள் விபத்துக்கள் தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களிற்கு மேல் தாமதிக்கப்படுகையில் ஆரம்ப அறிக்கையொன்றை சமர்ப்பித்து, நட்ட இழப்பு ஏற்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் முழுமையான அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் இடம்பெற்ற 10 விபத்துக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சனாதிபதி செயலக சுற்றறிக்கை | | |
| 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | 275,000 | அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அலுவலகங்கள் இயலுமான அளவிற்கு அரசாங்கத்திற்கு அல்லது கூட்டுத்தாபனங்களிற்குச் சொந்தமான கட்டிடங்களில் பேணிவரப்பட வேண்டிய போதிலும், அதனுடன் இனங்காது அமைச்சினால் நுவரெலியா செயற்திட்ட அலுவலகத்திற்காக வெளிவாரி வாடகைக் கட்டிடமொன்று பெறப்பட்டிருந்தது. |
| பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒரு முறையும் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 09 | - |
| (ii) | இரண்டாம் நிலை | 60 | 32 | 28 |
| (iii) | ஆரம்ப நிலை | 20 | 12 | 08 |
| | மொத்தம் | 89 | 53 | 36 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 36 பதவியணி வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்தது.